# சொற்கள் , தொடர்கள் அறிமுகம்

## புதிய சூழலும் அதற்குரிய **சொற்களும்**

ஒவ்வொரு வாரமும் ஆசிரியர்கள் மாணவர்களுக்குப்
புதிய ஒரு சூழலை அறிமுகப்படுத்த வேண்டும்.

மாணவர்கள் எதிர்கொள்கிற சூழல்களை வரிசைப்படுத்தி
அவற்றுள் அதிக பயன்பாட்டுடைய சூழலைத் தேர்ந்தெடுக்கவும்

அந்தச் சூழலில் காணப்படுகிற பொருள்கள் ,
செயல்களின் பெயர்களைப் பட்டியலிடவும்.
சூழலில் பயன்படுகிற பேச்சுகளை வரிசைப்படுத்தி
அவற்றை வினாவழியில் விளங்கிக் கொள்வதாக
உரையாடல் வழியில் புரிந்து கொள்வதாக
முறைபடுத்தவும். எளிய உரையாடல்களை வடிவமைக்கவும்.

இந்த உரையாடல்களை , பேசுவதற்கான தொடர்களை
வகுப்பறையில் உரையாடலாக நிகழ்த்திக் காட்டி
தமிழில் எவ்வாறு உரையாடுவது என்பதை
மாணவர்கள் உள்வாங்கச் செய்யவும்.

**உரையாடல்கள் அயற்சொற்களற்ற தெளிதமிழாகவும்
எளிய சொற்களாகவும் , அதிகப் பயன்பாடு உடையதாகவும்
வினா விடையில் அமைந்ததாகவும் உருவாக்கவும் .**

**வாரம் - 27** எழுத்துகளைப் படித்தல் **மீள் பார்வை**


| ஃ | அ | ஆ | இ | ஈ | எ | ஏ | ஐ |
|---|---|---|---|---|---|---|---|
| க் | க | கா | கி | கீ | கெ | கே | கை |
| ங் | ங | ஙா | ஙி | ஙீ | ஙெ | ஙே | ஙை |
| ச் | ச | சா | சி | சீ | செ | சே | சை |
| ஞ் | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞெ | ஞே | ஞை |
| ட் | ட | டா | டி | டீ | டெ | டே | டை |
| ண் | ண | ணா | ணி | ணீ | ணெ | ணே | ணை |
| த் | த | தா | தி | தீ | தெ | தே | தை |
| ந் | ந | நா | நி | நீ | நெ | நே | நை |
| ப் | ப | பா | பி | பீ | பெ | பே | பை |
| ம் | ம | மா | மி | மீ | மெ | மே | மை |
| ய் | ய | யா | யி | யீ | யெ | யே | யை |
| ர் | ர | ரா | ரி | ரீ | ரெ | ரே | ரை |
| ல் | ல | லா | லி | லீ | லெ | லே | லை |
| வ் | வ | வா | வி | வீ | வெ | வே | வை |
| ழ் | ழ | ழா | ழி | ழீ | ழெ | ழே | ழை |
| ள் | ள | ளா | ளி | ளீ | ளெ | ளே | ளை |
| ற் | ற | றா | றி | றீ | றெ | றே | றை |
| ன் | ன | னா | னி | னீ | னெ | னே | னை |

வாரம் - 26 எழுத்துகளை எழுதுதல் மீள் பார்வை - 2

| ஃ | அ | ஆ | இ | ஈ | எ | ஏ | ஐ |
|---|---|---|---|---|---|---|---|
| க | | | | | | | |
| ங | | | | | | | |
| ச | | | | | | | |
| ஞ | | | | | | | |
| ட | | | | | | | |
| ண | | | | | | | |
| த | | | | | | | |
| ந | | | | | | | |
| ப | | | | | | | |
| ம | | | | | | | |
| ய | | | | | | | |
| ர | | | | | | | |
| ல | | | | | | | |
| வ | | | | | | | |
| ழ | | | | | | | |
| ள | | | | | | | |
| ற | | | | | | | |
| ன | | | | | | | |

**அறிந்த எழுத்துகளை அடிக்கோடிட்டு, இணைத்துப் படிக்க ஊக்குவித்தல்**

- இந்த
னத்தை, தினமும்
ண்டு மணி நேரம்
வதால், என்
னம்பிக்கை
கிறது. நிச்சயம்
த்த போட்டியில்
ம் வெல்வேன்.
பாகாவை, ஏதோ
லை வருத்தி
யும் பயிற்சி
று பலர் நினைக்
றனர். உண்மை
யோகாசனம், நம்
லையும், மனதை
லேசா . உணர
க்கும்.
ல சுலபமான
காசனங்களை,
மும் 15 நிமிடங்
செய்தாலே,
றத்தைக் கண்
க காணலாம்.
பண்கள் சமை
றையில் குழம்பு
டுவது கூட ஒரு
கா தான். இந்தியன்
் கழிவறைகளை
யோகிப்பதும்
, ஆசனத்தின் நன்
களைத் தரும்.
ல் லூரியில்
ந்துவப் படிப்பு
ந்துவிட்டு, மருத்
த்துடன் யோகா
தையும் சேர்த்து,
த்தில்லா வைத்தி
தை மக்களுக்குத்
பது தான் என்
ியம்.




# இரு நாடுகளை இணைக்கும் பாலம்

**மொகாலி, ஏப். 1-**

*'இந்தியாவும், பாகிஸ்தானும், தங்களுக்குள் உள்ள பழமையான விரோத போக்கை ஒதுக்கி விட்டு, பிரச்னைகளுக்கு நிரந்தர தீர்வு காணும் வகையில் செயல்பட வேண்டும்' என, பிரதமர் மன்மோகன் சிங் வலியுறுத்தினார்.*

மொகாலியில் நடந்த இந்தியா - பாகிஸ்தான் கிரிக்கெட் அணிகளுக்கு இடையேயான அரை இறுதிப் போட்டியை பார்ப்பதற்காக வந்திருந்த பாக்., பிரதமர் கிலானிக்கு, இந்திய பிரதமர் மன்மோகன் சிங், இரவு விருந்து அளித்து கவுரவித்தார்.

இதன்பின் செய்தியாளர்களிடம் பிரதமர் மன்மோகன் சிங் கூறியதாவது:

நம் இரு நாடுகளுக்கும் இடையே, பழமையான விரோத போக்கு உள்ளது. அவற்றை எல்லாம் ஒதுக்கி வைத்து விட்டு, பிரச்னைகளுக்கு நிரந்தர தீர்வு காணும் வகையிலான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்.

இந்தியா - பாக்., இடையே, ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் அவசியம். இரு நாடுகளையும் இணைக்கும் பாலமாக கிரிக்கெட் விளங்குகிறது. இது ஒரு சிறப்பான துவக்கம்.

எந்த வகையான கருத்து வேறுபாடு ஏற்பட்டாலும், அதை சுமுகமாக பேசித் தீர்க்க வேண்டும். கிலானியும், நானும் பல்வேறு பிரச்னைகள் குறித்து விவா
சுமுகமாக தீர்
ளையும் மேற்
மர்களும் உறு
இரு நாட்டு
டும் என்று தா
நடந்த கிரிக்
திப்படுத்தப்ப
இவ்வாறு ப
பாகிஸ்தான்
எங்களுக்கு
நல்ல முறையி
னைகள் குறித்

# தேர்தல் அதிகாரிகள் பறிமுதல் செய்த பணம்

## ஐகோர்ட் உத்தரவு

**சென்னை, ஏப். 1-**

*நில விற்பனையில் 15 லட்சம் ரூபாய் தந்தவர்களை வழக்கில் சேர்த்து, அவர்களுக்கு இந்தப் பணம் எப்படி வந்தது என மனு தாக்கல் செய்யுமாறு, சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.*

திண்டுக்கல் மாவட்டம், பழநியைச் சேர்ந்த முருகேஸ்வரி என்பவர் தாக்கல் செய்த மனுவை, தலைமை நீதிபதி இக்பால், நீதிபதி சிவஞானம் அடங்கிய 'முதல் பெஞ்ச்' விசாரித்தது. மனுதாரர் சார்பில் வக்கீல்கள் என்.ஜோதி, பட்டி ஜெகநாதன் ஆஜராகினர். 'முதல் பெஞ்ச்' பிறப்பித்த உத்தரவு:

சொத்து விற்பனையில் செல்வம், மன்சூர் அகமது ஆகியோரிடம் 15 லட்சம் ரூபாய் முன்பணம் பெற்றதாக மனுதாரர் கூறியுள்ளார்.

எனவே அவர்களை வழக்கில் சேர்க்க வேண்டும். 15 லட்சம் ரூபாயை அவர்கள் எங்கிருந்து பெற்றனர் என்பதை மனுவாக தாக்கல் செய்வதற்கு, அவர்களுக்கு நோட்டீஸ் அனுப்ப வேண்டும். தேர்தல் கமிஷனும் மனு தாக்கல் செய்ய வேண்டும்.

இவ்வாறு 'முதல் பெஞ்ச்' உத்தரவிட்டுள்ளது.

ஐகோர்ட்டில், முருகேஸ்வரி தாக்கல் செய்த மனு:

எனது கணவர் மாரியப்பன், தி.மு.க.,வில் பகுதிச் செயலராக உள்ளார். வாக்காளர்களுக்கு கொடுப்பதற்காக பணம் வைத்திருப்பதாக தேர்தல் அதிகாரிகள் எங்கள் வீட்டுக்கு வந்தனர். 13 லட்சத்து 64 ஆயிரத்து 500 ரூபாயை பறிமுதல் செய்தனர்.

நிலம் விற்பனை செய்வதற்காக முன்பணமாக 15 லட்சம் ரூபாயை செல்வம், மன்சூர் அகமது ஆகியோரிடம் பெற்றோம். நிலத்தின் மொத்த விலை 33 லட்சத்து 50 ஆயிரம். மீதி தொகை 18 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய், விற்பனை பத்திரம் பதிவு செய்யப்பட்ட பின் தரப்படும்.

எனது வீட்டில் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட 13 லட்சத்து 64 ஆயிரத்து 500 ரூபாயை திருப்பித் தர தேர்தல் அதிகாரிக்கு உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு மனுவில் கூறப்பட்டுள்ளது.

# முல்லை பெரியாறில் புதிய அணை: ரூ.601 கோடி திட்ட அறிக்கை

**திருவனந்தபுரம், ஏப். 1-**

*முல்லை பெரியாறில் கேரள அரசு அமைக்க உத்தேசித்துள்ள, புதிய அணைக்கான 601 கோடிக்கான ரூபாய் திட்ட அறிக்கை, மாநில நீர் வளத் துறையால் தயாரிக்கப்பட்டு, அரசிடம் வழங்கப்பட்டுள்ளது.*

தமிழக கேரள எல்லையை ஒட்டி, இடுக்கி மாவட்டம் தேக்கடி அருகே, அடர்த்தியான வனத்தில் பெரியாறு நதியின் மீது முல்லை பெரியாறு அணை கட்டப்பட்டுள்ளது. இந்த அணையின் உயரத்தை அதிகரிக்க வேண்டும் என, தமிழக அரசு கோரி வருகிறது.

ஆனால், அணையின் உறுதி குறித்து, சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டு, நடந்து வருகிறது. ஆனால், கேரள அரசோ, தற்போதுள்ள அணையை இடித்துவிட்டு, அதன் சற்று கீழே, புதிய அணை அமைக்க, தீவிர முனைப்பு காட்டி வருகிறது.

இந்நிலையில், மாநில நீர்வளத் துறை புதிய அணை அமைக்க, 601 கோடி ரூபாய்க்கான திட்ட அறிக்கையை தயாரித்து, மாநில அரசிடம் வழங்கி உள்ளது. இதில், 43 கோடி ரூபாய், தற்போதுள்ள அணையை இடிக்க செலவிடப்படும். தற்போதுள்ள அணைக்கு சற்று கீழே அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள டுத்தி, அதை, வனத்துறையிடம் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக ஒரு கோடி ரூபாய் செலவிடப்படும்.

வள்ளக்கடவு பகுதியில் சாலை அமைக்க 13 கோடி ரூபாயும், பணியிட அலுவலகம், தொழிலாளிகள் தங்குவதற்கான கட்டடங்கள் ஆகியவற்றிற்காக, 12கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள அணைக்கட்டை, புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி இடித்துவிட முடியும் என்றும், திட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. புதிய அணைக்கட் அடி உயரம் வரை, நீர் சேமிப்

**அறிந்த எழுத்துகளை அடிக்கோடிட்டு, இணைத்துப் படிக்க ஊக்குவித்தல்**

**மாணவர்கள் வீட்டில் உள்ள செய்தித்தாள் , வார , மாத இதழ்கள் அல்லது கதைப் புத்தகங்களையும் வீட்டு வேலைக்குப் பயன்படுத்தலாம்**

# பழைய வரலாற்றை மாற்றுவார்களா புதிய

## வேலூர் மாவட்ட நிலவரம்

வேலூர் மாவட்டத்தில் உள்ள, 13 தொகுதிகளில், ஐந்து தொகுதிகளின் நிலையை நேற்று பார்த்தோம். மீதமுள்ள எட்டு தொகுதிகளின் நிலை இது.

அரக்கோணம் (தனி): இந்த தொகுதியில் அ.தி.மு.க., சார்பில் ரவி, விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் செல்லப்பாண்டியன் களத்தில் உள்ளனர். ஏற்கனவே தி.மு.க., கூட்டணியில் இங்கு எம்.எல்.ஏ.,வாக, சென்னையைச் சேர்ந்த புரட்சி பாரதம் கட்சி ஜெகன்மூர்த்தி இருந்தார். வெற்றி பெற்ற பிறகு, தொகுதிப் பக்கமே தலை வைத்துப் படுக்கவில்லை என்ற குற்றச்சாட்டு உள்ளது.

'வெளியூர் வேட்பாளர்களை நிறுத்தினால் ஓட்டு போட மாட்டோம்' என தொகுதியில் உள்ள அனைத்துக் கட்சியினரும், பொதுமக்களும் கூறிவருவதால், அ.தி.மு.க., வேட்பாளர் ரவிக்கு வெற்றி வாய்ப்பு பிரகாசமாக உள்ளது.

**: முக்கிய தொழில் :**

தோல் தொழிற்சாலைகள், நூற்பாலைகள், தீப்பெட்டி, பீடி தொழிற்சாலைகள், விவசாயம்.

கே.வி.குப்பம் (தனி): இந்த தொகுதியில் அ.தி.மு.க., கூட்டணியில் உள்ள இந்திய குடியரசுக் கட்சி மாநிலத் தலைவர் செ.கு.தமிழரசன், தி.மு.க., வேட்பாளர் சீதாராமன் களத்தில் உள்ளனர். இதில், சீதாராமன் கே.வி.குப்பம் ஊராட்சி ஒன்றியத்தில் தலைவராக இருந்த போது எந்த வித வளர்ச்சிப் பணிகளும் செய்யவில்லை என்பதால், பொதுமக்களின் அதிருப்திக்கு ஆளாகியிருக்கிறார்.


அமைச்சர் துரைமுருகனுக்கு வெற்றி வாய்ப்பைத் தந்த இந்த தொகுதியில், எந்தவித வளர்ச்சிப் பணிகளும் நிறைவேற்றப்படவில்லை என்பதாலும், சொந்த ஊரைச் சேர்ந்த தமிழரசனே களத்தில் நிற்பதாலும், அவருக்கு வெற்றி வாய்ப்பு உள்ளது.

குடியாத்தம் (தனி): தி.மு.க., சார்பில் ராஜமார்த்தாண்டன், அ.தி.மு.க., கூட்டணியில் உள்ள, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த லிங்கமுத்து ஆகியோர் இங்கு களத்தில் உள்ளனர். இதில் ராஜமார்த்தாண்டன் தேர்தலுக்கு புதியவர். மேலும், அக்கட்சியினர் அவருக்கு சரியாக ஒத்துழைப்பு கொடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டும் எழுந்துள்ளது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் பல தேர்தல்களைச் சந்தித்துள்ளதால், கடுமையாகப் போராடினால் தான் தி.மு.க., வெற்றி பெற முடியும்.

அணைக்கட்டு: பா.ம.க., சார்பில் கலையரசனும், தே.மு.தி.க., சார்பில் வேலுவும் இங்கு களத்தில் உள்ளனர். இத்தொகுதி வன்னியர்களின் கோட்டை. ஆனால், நாயுடுவான பாண்டுரங்கன் இங்கு இரண்டு முறை வெற்றி பெற்றுள்ளார். ஐந்தாண்டுகளாக தொகுதி பக்கமே வராதது 'சிட்டிங்' எம்.எல்.ஏ., பாண்டுரங்கனுக்கு மைனஸ் பாயின்ட். தி.மு.க., ஒன்றியச் செயலர் பாபு மூலம் தொகுதியில் வளர்ச்சிப் பணிகள் அசுர வேகத்தில் மேற்கொள்ளப்பட்டதால், தி.மு.க., கூட்டணியில் உள்ள பா.ம.க., வேட்பாளர் கலையரசனுக்கு வெற்றி வாய்ப்பு உள்ளது.

ஆம்பூர்: காங்கிரஸ் சார்பில் மறைந்த முன்னாள் எம்.பி., ஜெயமோகன் மகன் விஜய் இளஞ்செழியனும், இவருக்கு போட்டியாக முன்னாள் காங்கிரஸ் எம்.எல்.ஏ.,வுமான பாலுார் சம்பத்தும், அ.தி.மு.க., கூட்டணியில் உள்ள, மனிதநேய மக்கள் கட்சி வேட்பாளர் அஸ்லம் பாஷாவும் இங்கு களத்தில் உள்ளனர். காங்கிரஸ் ஓட்டு பிரிவதால், இவர்கள் இருவரும் முஸ்லிம் ஓட்டுகளை நம்பித் தான் உள்ளனர். ஆனால், மனிதநேய மக்கள் கட்சி போட்டியிடுவதால், பிரசார பலம், பணபலத்தை நம்பித் தான் வெற்றி என்ற நிலை உள்ளது.

வாணியம்பாடி: தி.மு.க., கூட்டணியில் அங்கம் வகிக்கும் இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக்கை சேர்ந்த 'சிட்டிங்' எம்.எல்.ஏ., அப்துல் பாசித்தும், அ.தி.மு.க., வேட்பாளர் சம்பத்குமாரும் போட்டியிடுகின்றனர். அப்துல் பாசித் மீது தொகுதியில் கடும் அதிருப்தி




**வாக்காளர் எண்ணிக்கை**

| | |
|---|---|
| ஆண் | 12,24,641 |
| பெண் | 12,29,453 |
| மற்றவர்கள் | 0 |
| மொத்தம் | 24,54,094 |